[1995 மார்ச் 17

55—

தனியார் பள்ளிகளுக்கு பணியிட அனுமதி வழங்குதல்

*10511—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில், போதிய பணியிட அனுமதி வழங்காமல் இருப்பதால், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பல ஆண்டாக ஊதியம் பெறாத நிலை இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணியிட அனுமதி உடன் வழங்கவும், அந்த ஆசிரியர்களின் நிலுவை ஊதியங்கள் பெறவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1988 மார்ச் மாதத்திற்கு முன்னர் தொடங்க அனுமதி அளிக்கப்பட்ட 332 தனியார் சிறுபான்மை அல்லது சிறுபான்மை அற்ற பள்ளிகளுக்கு அரசின் நிதியுதவியுடன் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதார் பணியிடங்கள் 1-6-1991 முதல் முன் தேதியிட்டு வழங்க 1992-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஒப்புதலோடு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. 1988-89, மற்றும் 1989-90 மார்ச் முடிய துவங்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு தாயுள்ளமும், கருணை உள்ளமும் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதியோடு 1-6-94 முதல் பணியிடங்கள் வழங்கப்பட்டு அரசு ஆணை நிலை எண் 50, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 20-1-1995-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கஷ்டங்களை எல்லாம் போக்குவது பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய ஊதியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் சேர்த்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 17]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையின்படி 1-6-94 முதல் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படும். இதற்கும் முன்பு 1992-ல் வழங்கப்பட்ட ஆணையின்படி 1-6-91 முதல் முன்தேதியிட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

56—

விருத்தாசலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்களைச் சீர் செய்தல்

*24618—திரு. ஆர்.டி. அரங்கநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டிடங்கள் இடிந்து பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடிந்த கட்டிடங்களை சீர்செய்து மேலும் புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் விருத்தாசலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டிடங்களை புதுப்பித்து கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 3 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அரிமா சங்கத்தின் மூலம் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் (டிஸ்ட்ரிக்ட் டிசென்ட்ரலைசேஷன் பிளான்) கீழ் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்ட அடித்தளம் போடப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. கட்டிடப் பழுதுகளை சீர் செய்யும் வேலைகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.